பொதுப்பணித்துறை
நீர்வள ஆதாரத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| பொறி.சி. பொதுபணிதிலகம்,எம்.இ.,<br>செயற்பொறியாளர், பொபது.,<br>கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், நீஆது.,<br>திருவள்ளூர். | மாவட்ட ஆட்சியர்,<br>திருவள்ளூர் மாவட்டம்,<br>திருவள்ளூர். |

கடித எண்.வபி/இவஅ.1/கோ.12/2021/நாள் 10.10.2021.

அய்யா,

பொருள்: திருவள்ளூர் மாவட்டம் – திருவள்ளூர் வட்டம் – சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், பூண்டியின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் வெளியேற்றுதல் – **முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை** விடுதல் – தொடர்பாக.

பார்வை: எழல்

------

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், பூண்டி 34.58 சதுர கி.மீ. பரப்பளவில் திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நீர்த்தேக்கத்தின் நீர் மட்ட மொத்த உயரம் 35 அடியாகும். இதன் முழு கொள்ளளவு 3231 மில்லியன் கன அடியாகும். இன்றைய நிலவரப்படி (10.10.2021) நீர் இருப்பு 33.95 அடியாகவும் கொள்ளளவு 2807 மிலிலியன் கன அடியாகவும் உள்ளது. சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், பூண்டியில் நீர் வரத்து காலை 6.00 மணி நிலவரப்படி 1691 கன அடியாக உள்ளது. தற்போது பருவ மழையினால் நீர் வரத்து தொடர்ச்சியாக உயர்வதால் சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. அணைக்கு வரும் நீர் வரத்து 34 அடியை தொட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுவதால் அணையின் வெள்ள உபரி நீர் வெளியேற்றும் ஒழுங்கு முறை (Compendium Rules) வழிகாட்டுதலின்படி நீர்த்தேக்கத்திற்கு வரும் உபரி நீரை அணையின் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர்த்தேக்கத்திலிருந்து இன்று **10.10.2021 பிற்பகல் 2.00 மணி அளவில் விநாடிக்கு 1000 கன அடி உபரி நீர் திறக்க** உத்தேசிக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்திற்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரி நீர் படிப்படியாக திறக்கப்படும் என **முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை** விடப்படுகிறது.

எனவே நீர்த்தேக்கத்திலிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, நெய்வேலி, எறையூர், பீமன்தோப்பு, கொரக்கந்தண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம், திருக்கண்டலம், ஆத்தூர், பண்டிக்காவனூர், ஜெகநாதபுரம், புதுகுப்பம், கன்னிப்பாளையம், வன்னிப்பாக்கம், அசூவன்பாளையம், மடியூர், சீமாவரம், வெள்ளிவாயல்சாவடி, நாப்பாளையம், இடையான்சாவடி, மணலி, மணலி புதுநகர், சடையான்குப்பம், எண்ணூர் மற்றும் கொசஸ்தலையாற்றின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை தருமாறும் மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பாக இருக்க தக்க நடவடிக்கை எடுக்கமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

— ஒம் —

செயற்பொறியாளர், பொபது.,
கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், நீஆது.,
திருவள்ளூர்.

நகல்:

1) வருவாய் துறை நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
2) தலைமைப்பொறியாளர், பொபது., சென்னை மண்டலம், நீஆது., சேப்பாக்கம், சென்னை.5 அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
3) அரசு செயலாளர், தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறை, தலைமைச்செயலகம், சென்னை.9 அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
4) கண்காணிப்புப்பொறியாளர், பொபது., பாலாறு வடிநில வட்டம், நீஆது. சேப்பாக்கம், சென்னை.5. அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் அனுப்பப்படுகிறது.
5) மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் முகாம் அலுவலகம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
6) மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
7) காவல்துறை கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் அனுப்பப்படுகிறது.
8) ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
9) ஆணையர், சென்னை மாநகரா காவல்துறை, சென்னை அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது.
10) பொது மேலாளர், தென்னக இரயில்வே, சென்னை.3 அவர்களுக்கு தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகாகவும் பணிந்து அனுப்பப்படுகிறது
11) கோட்ட வருவாய் அலவலர், திருவள்ளூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
12) வட்டாட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
13) வட்டார வளர்ச்சி அலுவலர், பூண்டி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

10/10/21

செயற்பொறியாளர், பொபது.,
கொசஸ்தலையாறு வடிநில கோட்டம், நீஆது.,
திருவள்ளூர்.